# சிறுபிள்ளைகளின் காய்ச்சல் காரணமாக ஏற்படும் வலிப்பு

30



கல்வி சார் பொருட்கள் தயாரிப்பலகு
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்

# சிறு பிள்ளைகளின் காய்ச்சல் காரணமாக ஏற்படும் வலிப்பு

குழந்தைகளின் நரம்புத்தொகுதியானது இலகுவில் தூண்டப்படக்கூடியது.காய்ச்சலின் காரணமாக அதாவது சடுதியான உடல் வெப்பநிலை உயர்வினால் நரம்புத் தொகுதியானது தூண்டப்பட்டு உடலியல் மாற்றங்களாக வெளிக்காட்டப்படும்.

**மாற்றங்களாக**

* குழந்தை நினைவு இழத்தல்
* குழந்தையின் உடல் இறுக்கமாதல்
* கண் விழிகள் மேல் நோக்கி இருத்தல்
* மேலும் சிலரில்,

தொடர்ந்த விரைவான, கட்டுப்பாடில்லாத உடலசைவுகள்.

உடலின் கட்டுப்பாடு இழக்கப்பட்டு,

சிறுநீர் கழித்தல்

மலம் கழித்தல்

நாக்குக் கடித்தல்

## இவை தொடர்பாக :

* பொதுவாக இவை ஆபத்தில்லாதவை
* பெரும்பாலும் 6 மாதம் முதல் 6 வயது வரையான குழந்தைகளில் ஏற்படுவது.
* காய்ச்சல் ஏற்பட்டு ஓரிருநாட்களினுள்ளே தோன்றும்.
* பெரும்பாலும் சிலநிமிடங்களினுள்ளே நின்று விடும்.
* உடல் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துபவை அல்ல

## காய்ச்சலின் போது வலிப்பு ஏற்படின் என்ன செய்யலாம் ?

* பதற்றமடையாதீர்கள்
* குழந்தையை இயல்பான நிலையில் படுக்க வைக்கவும்
* குழந்தையை அழைத்தல், உடலைக் குலுக்குதல், குழந்தையின் கவனத்தை திசை திருப்ப முயற்சித்தல் போன்றவற்றைத் தவிர்க்கவும்
* குழந்தையின் உடலில் ஏற்படும் அசைவை தடுக்க முயற்சிக்க வேண்டாம்
* உணவோ, நீரோ, மருந்தோ கொடுக்க வேண்டாம்.

* சத்தி எடுப்பின் உடனடியாக அகற்றி மூச்சு விடுதலை ஒழுங்காக்கவும்.

## மேலும் வலிப்ப நின்றவுடன்

* குழந்தையை சரித்ததுபடுக்க வைக்கவும் (மூச்சு விட இலகுவான நிலையில்)
* ஒரு விரல் பாவித்து குழந்தையின் வாய்க்குள் ஏதாவது இருப்பின் அகற்றவும்.

இதன் பின் வைத்தியரிடம் காண்பித்து அறிவுரை பெறவும்

## இவை மீளவும் தோன்றுபவையா?

* பொதுவாக மீள வருதல் குறைவு
* 30%சிறர்களில் மீளத்தோன்றுவதாக அவதானிக்கப் பட்டுள்ளது.
* இவை பொதுவாக 6 வயதின் பின் தோன்றுவதில்லை

## முன்னர் காய்ச்சலின் காரணமான வலிப்பு நோய் வந்த குழந்தைக்கு காய்ச்சல் வந்தால்......................

* மீண்டும் வலிப்பு வர இடமுண்டு
* எனவே எப்போது காய்ச்சல் உணரப்படுகிறதோ அதைக் குறைக்கும் வழிமுறைகளைக் கையாளவும்

## குழந்தையின் காய்ச்சலைக் குறைக்க

* உடைகளை அகற்றி காற்றுப்பட படுக்க வைக்கவும்
* நீரில் நனைத்த துணியால் குழந்தையை முழுமையாகத் துடைத்து விடவும்.
* குழந்தைகளுக்கான "பனடோல் சிறப்" அல்லது குழந்தைகளுக்கானபனடோல் குளிகையை குழந்தையின் வயதிற்கேற்ப வழங்கலாம்.

## சிறார்களில் எல்லா வலிப்பு நோயும் காய்ச்சலின் போதான வலிப்பு நோயா ?

இல்லை

இது பொதுவானது.

எனினும் வலிப்பு நோய்.

மூளைக்காய்ச்சல். மூளை மலேரியா போன்றவை அமையலாம்.

## உடனடியாக வைத்தியரை நாட வேண்டிய சந்தர்ப்பங்கள்.

* காய்ச்சல் குறையாது இருந்தால்
* வலிப்பானது 10 நிமிடங்களிற்கு மேலும் தொடர்ச்சியாக இருந்தால்.
* சிறு இடைவெளிகளில் மீண்டும் வலிப்பு வந்தால்
* மூளைக் காய்ச்சல், மூளை மலேரியா என்ற சந்தேகமிருந்தால்

**எவ்வாறெனினும் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது.**

அனுசரணை:-

**அரிமாக்கழகம்**
நல்லூர்
பதிவிலக்கம் 306 B
2003 -2004


விளம்பர அனுசரணை:-

ஸ்ரீராம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்,
250 பலாலி வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்